**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 05 ஆம் நாள் வியாழன் கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திரு.G.வீராங்கன், கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No.205/2019** வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | பழனி | **வயது** | : | 79 |
| **த.பெ** | : | துளசி | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | களம்பூர் | **தொழில்** | : | முன்னாள் ராணுவவீரர் தற்போது விவசாயம் |

**<u>05.03.2026 – வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1)நான் பெங்களூரில் வசித்து வருகிறேனா என்றால் பெங்களூரில் என் பிள்ளைகள் படித்துவருவதால் நான் அங்கு வசித்துவருகிறேன், களம்பூருக்கும் வந்துசெல்வேன். ஆதார் கார்டு எங்குள்ளது என்றால் பெங்களூர் முகவரியில் உள்ளது. பெங்களூர் முகவரி என்னவென்றால் எண்.9, 3 வது குறுக்கு தெரு, ஸ்ரீனிவாகிலுர் மெயின்ரோடு, இ.ஜி.புரா, பெங்களூர் - 47 ஆகும். என்னுடைய முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் என்னுடைய முகவரி நெ.79, மேட்டுதெரு, களம்பூர் என்று நான் கூறியுள்ளேன், நான் பெங்களூரில் தான் உள்ளேன் முதல்விசாரணையில் கொடுத்துள்ள களம்பூர் முகவரி தவறு என்றால் சரியல்ல. என்னுடைய நிரந்தர முகவரி பெங்களூர் தான் களம்பூர் இல்லை, வழக்கிற்காக தவறாக களம்பூர் முகவரியை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல, என்னுடைய பூர்வீகம் களம்பூர் தான், களம்பூரில் எனக்கு வீடும் நிலமும் உள்ளது.

2) நான் பாகபிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சர்வே நெம்பர் 232/8 பழைய நெம்பர் ஆகும், மேலும் தற்போதுள்ள புதிய சர்வே சர்வே நெம்பர் 232/8 பி என்றால் சரிதான். தாவா சொத்து புன்செய் நிலம் என்றால் சரிதான், தற்போது கிணறும், கிணறுமேடும் இல்லை. ஆவணத்தின் படி என்னவென்று தாவாசொத்து உள்ளது என்றால் பழைய பத்திரப்படி கிணறு மற்றும் கிணறுமேடு என்றுதான் உள்ளது. **வா.சா.ஆ-1** பட்டா ஆவணத்தில் கூட்டு பட்டாவாக என்னுடைய தந்தை பெயரும், 1ம் பிரதிவாதியின் தந்தை பெயரும் உள்ளது என்றால் சரிதான். 1981 ல் என் தந்தையின் வாரிசுகளுக்குள் பாகம் பிரித்துகொண்டோம் என்றால் சரிதான். **வா.சா.ஆ-2** ஆவணத்தின் முன்னிலையில் தாவாசொத்தில் கிணறு, கிணறுமேடு பொதுவில் பாதி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்சரிதான்.

3)**வா.சா.ஆ.3** ல் பிரதிவாதிகளின் பாகபிரிவினை பத்திரத்தில் தாவா சொத்தில் கிணறு, கிணறுமேடு 4 ல் 1 பாகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். **வா.சா.ஆ.4** ல் 1ம் பிரதிவாதியின் சித்தப்பா நடராஜன் என்பவரிடம் 07.06.1984 ல் தாவா சர்வே நெம்பரில் கிணறு, கிணறுமேட்டில் 4 ல் 1 பாகம் நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். **வா.சா.ஆ.5** 14.10.2004 ல் நெடுஞ்சாலைத்துறை தாவா சர்வே நெம்பரில் 1 ஏர்ஸ் நிலத்தை சாலைக்காக

வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ-5 ல் நான் கையொப்பம் போடவில்லை என்றால் போட்டுள்ளேன். நான் கையொப்பம் போட்டதாக வா.சா.ஆ-5 ல் எதுவும் குறிப்பிடபடவில்லை என்றால் சரியல்ல.

4)நான் கையொப்பம் போடாததால் மேற்படி பணத்தை அரசாங்கம் டெபாசிட் செய்து வைத்துள்ளது யாரிடமும் பணத்தை கொடுக்காமல் வைத்துள்ளது என்றால் எனக்கும், பிரதிவாதிகளுக்கும் பணத்தை தனிதனியாக கொடுத்தார்கள். எனக்கு எவ்வளவு பணம் அரசாங்கம் கொடுத்தது என்றால் 800 ரூபாய்க்கு கீழ் இருக்கும். ஆகையால் நெடுஞ்சாலைத்துறைக்கு நானும், பிரதிவாதிகளும் பொதுவாகத்தான் 1 ஏர்சை எழுதிகொடுத்துள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ-6 நான் தவறாக தகவல் கொடுத்து துளசி மகன் பழனி என்றும், கோவிந்தசாமி மகன் பழனி என்றும் தகவல் கொடுத்து தவறாக பட்டா என் பெயருக்கு மாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு 5 ½ செண்ட் பாகம் உள்ளது எந்த அடிப்படையில் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சர்வே நெம்பரில் மொத்தம் 9 செண்ட், அதில் பாதி பாகம் என் அப்பாவிற்கு பூர்வீகமாக 4 ½ செண்ட் வந்தது, 1984 ல் என் பெரியப்பா நடராஜன் என்பவரிடமிருந்து அவரின் 2 ¼ செண்டை தாவா சர்வே நெம்பரில் நான் கிரையம் பெற்றேன், ஆக மொத்தம் 6 ¾ செண்ட் எனக்கு பாத்தியப்பட்டது. 1 ¼ செண்டை நான் நெடுஞ்சாலைத்துறையினருக்கு கொடுத்துவிட்டேன்.

5)நெடுஞ்சாலைத்துறையினருக்கு நானும், பிரதிவாதிகளும் 2 ½ செண்டை பொதுவாக நாங்கள் கொடுத்திருக்கும் பட்சத்தில் எனக்கு மட்டும் 1 ¼ செண்டை நான் கொடுத்ததாக நான் எப்படி கூறுகிறேன் என்றால் நெடுஞ்சாலைத்துறை எனக்கு பாதி தொகையும், பிரதிவாதிகளுக்கு மீதி பாதி தொகையும் சரிபாதியாக கொடுத்தார்கள். நெடுஞ்சாலைத்துறையினரிடமிருந்து பணம் தற்போது வரை நான் பெறவில்லை, பிரதிவாதியும் பணம் பெறவில்லை, டெபாசிட்டில் தான் தற்போது வரை உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி 2 ½ செண்டில் 4 ல் 3 பாகம் எனக்கும், 1 பாகம் பிரதிவாதிக்கும் இந்த பிரச்சனையில் தான் நெடுஞ்சாலைத்துறை பணம் எதுவும் எங்களுக்கு கொடுக்காமல் டெபாசிட்டில் வைத்துள்ளது என்றால் சரியல்ல. மேலும் தாவா சொத்தில் மொத்த விஸ்தீரணம் 6 ½ செண்ட் என்று குறிப்பிட்டு தற்போது அதில் 5 ½ செண்ட் வாதி பாகம் கேட்கிறேன் அது தவறு என்றால் சரியல்ல.

6)பாகபிரிவினை வழக்கில் தாவாசொத்து 4 ல் 3 பாகம் என்றுதான் நான் கோரியிருக்க வேண்டும், நான் ஐக்குபந்தி எதுவும் குறிப்பிடாமல் 5 ½ செண்ட் பாகம் என்று நான் கூறியிருப்பது தவறு என்றால் சரியல்ல. நீதிமன்ற கட்டணத்தை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக உரிமை விளம்புகை வழக்கு தாக்கல் செய்யாமல், பாகபிரிவினை வழக்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா கிணற்றிலிருந்து தான் பிரதிவாதிகள் விவசாயத்திற்கு தண்ணீர் பயன்படுத்தினார்களா என்றால் சரிதான். அந்த கிணற்றை சட்டத்திற்கு புறம்பாக கிணறு துற்றேன் அதற்கு பிரதிவாதிகள் என்மீது போலிசில் புகார் அளித்தார்கள் என்றால் சரியல்ல, நாங்கள் இருவரும் சேர்ந்துதான் கிணற்றை துத்தார்கள், மேலும், அப்போது நான் பெங்களுரில் இருந்தேன் பிரதிவாதிகள் தான் நேரிலிருந்து கிணற்றை மூடினார்கள்.

7)தற்போது கிணறு, கிணறுமேடும் இல்லை என்றால் இல்லை. கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துசெல்வதற்காக பிரதிவாதிகள் பைப் லைன் போட்டுள்ளார்களா என்றால் போட்டுள்ளார்கள், ஓரமாக செல்கிறது. பிரதிவாதியின் இடத்தை நான் ஆக்கிரமித்துள்ளேன் என்று போலிசில் புகார் அளித்துள்ளாரா என்றால் இல்லை. நான் பொய் கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நா'ன பயிர்வைக்கவில்லை என்றால் பிரதிவாதிகள் என்னை பயிர்வைக்க விடுவதில்லை. நான் பெங்களூரில் வசித்துவந்ததால் என்னால் பயிர்வைக்கமுடியவில்லை, தற்போது பிரதிவாதிகள் மீது பழி போடுகிறேன் உண்மையில் பிரதிவாதிகள் என்னை தடுத்திருந்தால் தடை உத்தரவு வழக்கு போட்டிருப்பேன் என்றால் சரியல்ல.

8)தாவா சொத்தில் கிணறு மற்றும் கிணறுமேடு பொதுவாக இருக்க வேண்டும் என்றால் சரியல்ல. தனிப்பட்ட முறையில் தாவாசொத்தை அனுபவிக்க வேண்டும் என்றால் சரியல்ல. ஆகையால் நான் 4ல் 3 பாகம் உரிமை உள்ளது என்று தான் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும், ஆகையால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் என் அனபவத்தை தடை செ்யதிருந்தால் 4ல் 3 பாகத்திற்கு நான் தடையுத்தரவு வழக்கு தாக்கல் செய்திருப்பன் , அப்படி தாக்கல் செய்யவில்லை, ஆகையால் நான் வழக்கு தவறாக தாக்கல் செய்துள்ளதால் வழக்கு பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER Digitally signed by SALMA BASEER Date: 2026.03.05 17:38:17 +0530

District Munsif,
Polur.